6th February 1959]

Slums

* 79 *Q.*—Sri P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

சென்னை நகர Slum Clearance Act-ஐ மற்ற நகரங்களுக்கும் விஸ்தரிப்பது சம்பந்தமாக மத்திய சர்க்காருக்கும், சென்னை சர்க்காருக்கும் நடைபெற்ற கடிதப் போக்குவரத்துக்களின் விவரங்கள் யாவை ?

The Hon. Sri R. VENKATARAMAN : There has been no correspondence between the State Government and the Union Government regarding the question of extending the provisions of the Madras Slum Improvement (Acquisition of Land) Act, 1954, to the mufassal areas.

Sri P. G. MANICKAM : ஸார், இந்த ஸ்லம் க்ளியரன்ஸ் ஆக்ட்டானது மற்ற நகரங்களுக்கு விஸ்தரிக்கப்படும் என்று இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் நாளது வரையிலும் அவ்விதம் அவை செய்யப்படவில்லை என்று தெரிகிறது. ஆகவே உடனடியாக இதை இதர நகரங்களுக்கும் விஸ்தரிக்க மத்திய சர்க்காரின் உதவியோடு, சென்னை சர்க்கார் உடனடியாக முன் வருமா ? முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் சென்னை சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ளுமா என்று கேட்டிருந்தால் அதைப்பற்றி யோசிக்கலாம் என்று பதில் சொல்லியிருக்கலாம், ஆனால் மத்திய சர்க்காரின் உதவியோடு இந்த சர்க்கார் முயற்சி எடுத்துக் கொள்ளுமா என்று கேட்டிருப்பதால் இப்போது உடனடியாக முடியாது என்று தான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

Houses for Harijans

* 80 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have received any additional allotment from the Central Government in 1958–59 for the construction of houses for Harijans; and

(*b*) if so, the number of houses to be constructed?

The Hon. Sri P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Sri K. R. NALLASIVAM : ஸார், இந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிவு பெறும் நிலையில் 5 சதமானம் வீடுகள்கூட கட்டி முடிக்கவில்லை என்று தோன்றுகிறது. ஆகவே, இன்னும் அதிகமான தொகையை மத்திய சர்க்காரிடமிருந்து பெறுவதற்கு இந்த சர்க்கார் உடனடியாக முயற்சி எடுக்குமா ?

The Hon. Sri P. KAKKAN : மத்திய அரசாங்கத்திலிருந்து 1957–58-ம் வருடத்திற்கு மூன்று லட்சம் ரூபாய் அதிகமாக ஒதுக்கி மத்திய சர்க்காரின் திட்டத்தின் கீழே வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதில் 15 லட்சத்து 9 ஆயிரம் ரூபாயை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இந்த முறையில் அதிகமாகத்தான் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.